முரசொலி

முரசு 1 | சென்னை 9—4—54 வெள்ளி | ஒலி 2

காமகோடிக்கு சீட கோடி...

காஞ்சி காம கோடி சங்கராச்சாரியார் சாமிகள் அவர்கள் சமூகத்திற்கு ஒரு சீட கோடி எழுதிக் கொண்டது. தங்களின் சார்பாக தங்கள் மடத்தின் மேனேஜர் எல்லா பத்திரிகைகளிலும் அறிவித்திருந்த ஆலய ஜீரணோத்தாரண திட்டங்களையும் அத் திட்டங்களை நிறைவேற்ற ஈடுபட விரும்புகிறவர்கள் மடத்திற்கு பதில் எழுத வேண்டும் என்ற அறிவிப்பையும் விடுத்திருந்ததை இந்த ஊனக் கண்களால் பார்த்தேன். பரவசமுற்றேன், தாங்கள் தெரிவித்திருந்த திட்டங்களை என்னென்று சொல்வேன்; என்னென்று சொல்வேன்—ஆகா. அபூர்வம்! அமர்க்களம்! பேஷ்! பேஷ்!

1. திராவிட தேசத்திலுள்ள எல்லா குழந்தைகளையும், திருவெம்பாவை திருப்பாவை இவைகளில் ஒன்றையாவது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் மனப் பாடம் செய்யும்படி செய்ய வேண்டும்.

இது தங்களுடைய முதல் உபதேசம். நமது தேசத்துக் குழந்தைகள் வெள்ளை தேசத்துக் குழந்தைகள் போல விஞ்ஞான ஆக்க வேலைகளிலே ஈடுபட்டு வீணாகப் போவதைத் தடுத்து பாவைகளை மனப்பாடம் செய்து கொண்டிருக்க வேண்டுமென்று தங்களைப் போன்ற ஸ்வாமிகள் கூறுவது எவ்வளவு பொருத்தமானது. வெறும் தேசம் என்று குறிப்பிடாமல் திராவிட தேசம் என்று குறிப்பிட்டு விட்டீர்கள். அதுதான் எனக்கு சிறிது வருத்தம் "திராவிடம்" என்கிற சொல்லே கிடையாது என்று மார் தட்டிக் கூறி வந்த நமது மறத்தமிழர்கள் சிலருக்கு இது பெரிய இடியாகப் போய்விட்டதோடு, திராவிடக் கட்சிக் காரர்களுக்கும் இடம் கொடுத்ததாகி விட்டது. திராவிட தேசம் என்று நீங்கள் ஏன் குறிப்பிட்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்; ஆரிய தேசத்துப் பிள்ளைகள் சோம்பேறிகளாகப் போக வேண்டாம் விஞ்ஞான மேதைகளாய், நிபுணர்களாய், வித்தகர்களாய் வரட்டும் என்ற அடிப்படை ரகசிய நோக்கத்தை மனதில் வைத்துத்தான் மகானாகிய தாங்கள் அப்படி ஒரு பொது மடல் தீட்டியிருக்கிறீர்கள். இருந்தாலும் திராவிடக் கட்சிக்காரர்கள் இதைப் பயன்படுத்திக் கொள்வார்களே என்று பயந்தேன். நானிருக்கப் பயமேன் என்று தாங்கள் சொன்னால் எனக்குப் பயமில்லை. சரி—தங்களின் இரண்டாவது உபதேசத்தைப் பார்ப்போம்.

2. பூஜை இல்லாத—சிவலிங்கம், விஷ்ணு மூர்த்திகளுக்கு ஒரு கால பூஜையாவது நடக்கும்படி செய்தல்.

அந்தோ பரிதாபம்—தமிழ் நாட்டிலே பசி, பஞ்சம், பட்டினியால் பல லட்சம் பாமர ஜனங்கள் செத்து மடிவதை பெரிதாகப்பேசுகிறார்களே மூளையில்லாதவர்கள் இதோ பூஜை நைவேத்யம் இல்லாமல் புலம்பிக் கொண்டிருக்கும் சிவலிங்கங்களையும், விஷ்ணு மூர்த்திகளையும் தங்களைத் தவிர வேறு யார் கணக்கெடுத்துச் சொல்லி கடவுள்களின் கஷ்டம் போக்கமுடியும்? ஒரு கால பூஜையாவது செய்விக்க வேண்டும் என்று நீங்கள் கூறும் போது அந்த தெய்வங்களின்மீது எவ்வளவு பரிதாபம் ஏற்படுகிறது. கூடாது – கூடாது – இந்த அக்ரமம் கூடாது. நம்மைப் படைத்து ரக்ஷிக்கும் ஆண்டவர்கள் இப்படி அரைப் பட்டினி கிடக்கக் கூடாது. எல்லாம்சீரி சுவாமிளே கடவுள் மீது தங்களுக்கேற்பட்ட கருணைக்கு என் நன்றி – அதே நேரத்தில் கடவுள்கள் பலர் சிந்து வாராற்றுக் கிடக்கிறார்கள் என்ற செய்தி அந்தச் சுயமரியாதைக் காரர் களுக்குத் தெரியும் படி செய்து விட்டீர்களே என்று எண்ணும் போது கொஞ்சம் வெட்கமாயிருக்கிறது. உம்; வெட்கத்தைப் பார்த்தால் முடியுமா — வேலை நடக்க வேண்டுமே!

3. வேதம், திருமுறை, திவ்ய பிரபந்தம் இவைகளில் கொஞ்சமாவது சந்நதியில் விண்ணப்பம் செய்விக்க வேண்டும்

என்றும் கூறியிருக்கிறீர்கள். சந்நியம்பாளின்மை எவ்வளவு குறைந்து விட்டது பார்த்தீர்களா? ஆஸ்திகர் வேடத்தில் எவ்வளவு நாஸ்திகர்கள் ஆலயங்களில் தோன்றி விட்டார்கள் என்பதற்குத் தங்களின் இந்த உபதேசம் தக்க சான்று. வேதம், திருமுறைகளை கொஞ்சமாவது விண்ணப்பம்செய்யவேண்டும். ஆ கடவுளே! கோயில் சந்நதிகளில்வேத ஒலியும் — திருமுறை முழக்கம் இதுவரைகேட்கவில்லை யென்ற உண்மையை இப்போதல்லவா அடியேனும் உணர்கிறேன். ஆலயத்துக்கு வருவோர் — வேத ஒலி கேட்க அல்ல; வேல்விழிகளைக் காண — என்று சு. ம. க்காரன் சொல்லும் போது நானும் அவன் மீது சீறி விழுந்தேன்—இப்போதல்லவா தெரிகிறது — வேத ஒலியே கேட்பதில்லை என்ற வெளிச்சமான உண்மை! அபச்சாரம்! அபச்சாரம்!

4. கூடிய மட்டும் அர்ச்சகர்களுக்கும் அந்தந்த ஆகமஞானம், அனுஷ்டான முறை போதித்தல்.

இதையும் கூறி யுள்ளீர்கள் குல குருவே! ஆகமஞானமும் அனுஷ்டான முறையும் கற்காதவர்கள் கூட அர்ச்சகர்களாய் இருக்கிறார்கள்; ஆண்டவனுக்கும் மக்களுக்கு மிடையே ஆ... முகத் தூதர்களாய் வாழ்கிறார்கள் என்ற விசித்திரத் தகவலை இப்போதே கேள்விப் படுகிறேன்.

5. சிற்ப–சித்ர—ஜோதிட சாஸ்திரங்களைப் பயின்றவர்களை உபசரித்தல் என ஐந்தாவதாக உபதேசித்துள்ளீர்கள். தெய்வீக சிலைகளை — ஓவியங்களை ஆக்குபவனே சிற்பி–ஓவியன்; என்... முடிவு கட்டி யிருக்கி... ஜோதிட சாஸ்திரங்களை ... பார்க்க தேவையில்லை அமெரிக்கா போன்றவர் நடத்துகிறதுடனும் ரஷ்யாபோன்றவர் நடத்துகிற பத்திரிகையானாலும் நமது ஜோதிட சாஸ்திரத்தை வெளியிட்டு பேரிகைகொட்டாமலிருப்பதில்லை. ஆகவே அதைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. பொதுவாக தாங்கள் இந்த நேரத்தில் வெளியிட்ட அறிக்கை மிக மிக முக்கியமானது என்பதை சொல்லவும் வேண்டாம். சங்கராச்சாரியார் அவர்களே! சக்ரவர்த்தி ஆச்சாரியார் பதவியிலிருந்து விலகி விட்டார் இனி வேத புராணங்களை விமர்சிக்க அவரைப் போல திறமைசாலி அரசியலிலே இல்லை. அக்குறை போக்கத்தான் தாங்கள் உடனடியாக அறிவிப்பு வழங்கியிருக்கிறீர்கள். அவர் 30ந் தேதி விலகினார், தாங்கள் 31-ந் தேதி இந்த மூட ஜெகத்திற்கு மடங்கல் தீட்டி யிருக்கிறீர்கள். தெய்வ பக்தி உள்ள நாடுகள்தான் தேன் வாழ்வு நடத்துகின்றன; தென்னாட்டில் தெய்வ பக்தி குறைந்து வருகிற தென்று தங்கள் அறிக்கை கூறிடுகிறது. இதை எதிர்த்துக் கேலி செய்பவர்களுமிருப்பார்கள்.

" அமெரிக்காவில் — வருண ஜெபம் செய்வதில்லை. ரஷ்ய நாட்டு மாலங்கோவ் இந்திய பிரதமரைப் போல கும்பமேளாவைத் தரிசிப்பதில்லை—சீனநாட்டு

தஞ்சை அழைக்கிறது வாரீர்! வாரீர்!

தலையங்கம்

சென்னை (9—4—54) வெள்ளி

செந்நெற் கொல்லையிலே !

" தஞ்சைக்கு வாரீர் !" என்று தமிழ் முழக்கம் கேட்கிறது. பஞ்சைக்கு வாழ்வளித்து, அவர் தம் நெஞ்சை நிமிர்த்திடும் கொள்கையினர் கூடப் போகிறார்கள்—"பகுத்தறிவு வளர்க!" எனக் கூவப் போகிறார்கள்—பழந்திரு நாட்டின் விடுதலையை உடனே கோரப் போகிறார்கள்! முடியுடை வேந்தர்கள் வலம் வந்த வீதிகளில் முன்னேற்றக் கழக வீரர்கள் உலவிடப் போகிறார்கள் !

அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படைகள் பவனி வந்த தஞ்சைப் பெருந் தெருக்களிலே அண்ணாவின் தம்பிமார்கள் பட்டாள நடை போடப் போகிறார்கள் !

மனதை யள்ளும் மாட மாளிகை ! இந்த மண்ணை மீட்கும் மன மாளிகை படைத்தோர் அதனருகே !

உயர்வு கோட்டும் உப்பரிகை! அதன் பக்கத்தே உரிமை முரசு தட்டும் உத்தமர்கள் !

" உறுதி! உறுதி! தாயகத்தின் வெற்றி விரைவில் என்பது உறுதி!' என விருத்தம் பாடுவர்—வருத்தம் சாடுவர் !

" பொருத்த முளோர் இவர் போருக்கு " எனப் போற்றிடும் தாயகம்! புகழ்ந்திடும் திராவிடம் !

வரும், 10–11–நாட்களில் தஞ்சையிலே கூடும் மாநாடுகள் நமது போர்க்காதை தீட்டிடும் பொன்னேடுகள். வெறும் விடுதலைப் பல்லவியோடு நின்றவர்களா; அங்கு கூடப் போகும் வீரர்கள்! இல்லை-இல்லை! விடுதலையை என்ன விலை கொடுத்தாகிலும் வாங்கிடுவோம் என்பதை தாங்கள் சிந்திய குருதி மூலம் நாட்டுக்கு அறிவித்த நாயகங்கள் !

வட நாட்டில் வளம் கண்டோர்—வாழ்ந்து கெட்ட திராவிடர் கண்களில் குளம் கண்டோர்—விடுதலை பெற்றிட களம் கண்டோர்—வீழ்ந்துவிட்ட ஆறு பிணம் கண்டோர்—வெற்றியின் மணம் கண்டோர்—தஞ்சைத் தரணியிலே கூடுகின்றனர். கடந்த காலத்தை நினைத்திடவும்—இன்ப எதிர் காலத்தை சமைத்திடவும் புதியதோர் செயல் வகுக்கக் கூடுகின்றனர்.

கூடுமிடம் தஞ்சை! நமது கொள்கை விளையும் நஞ்சை! பன்னீர் செல்வம் பந்தல்—அழகிரியின் அரங்கம்! ஆம், தஞ்சை பூமியே பன்னீர் செல்வம் பந்தல்தான்—அழகிரியின் அரங்குதான்; அங்கே தான் நாமும் கூடுகிறோம் நலிவு போக்க; புதிய பொலிவு எழுப்ப !

முதல்நாள் சமுதாய சீர்திருத்த மாநாடு. சட்டமன்றத்தில் கோட்ட மடிப்போர் தர்பாரை சுட்டிக் காட்டும் தீரர் – கொள்கைச் சிங்கம் **கோவிந்தசாமி எம். எல். ஏ.** தலைமை வகிக்கிறார்.

சீரான தமிழிலே சிங்காரச் சொன்மழை பொழியும் பேராசிரியராம் **அன்பழகன் எம். ஏ.** மாநாட்டை துவக்கி வைக்கிறார்.

மறுநாள் அரசியல் மாநாடு. உழைக்கும் உத்தமர் – கள்ளமிலா வெள்ளையுளங் கொண்ட தோழர் – பொழுதெல்லாம் கட்சிக்கே எனப் பொதுப்பணி யாற்றும் நல்லான் **என். வி. நடராசன்** தலைமை யேற்கிறார்.

பெரியாருக்குப் பெரியாரின் திருச்செல்வர் – பேச்சால், எழுத்தால், நாட்டுப்பணிபுரியும் பெரும் வீரர் – அரசியல் கருத்துக்களை அள்ளித் தெளிக்கும் ஆற்றலுடையார் அன்பர் **ஈ. வி. கே. சம்பத்** மாநாட்டைத் துவக்கி வைக்கும் பொறுப்பேற்றுள்ளார்.

இரு மாநாடுகளிலும் தென்னகத்தின் இதயஜோதி நடிப்புப்புலவர் **கே. ஆர். ராமசாமி** அவர்கள் காதல்ஜோதி – ஓர் இரவு நாடகங்கள் மூலம் இயக்கப் பிரச்சாரம் செய்கிறார்.

திராவிடர்தலைவர், இந்த நாட்டின் செல்வம், சிந்தை – அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடப் பேசும் செந்தமிழ்க் காவலன் – செயல் மன்னன் — சிங்க நடையும், சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், புரட்சிக் கவி நடையும் புதிய உரை நடையில் கண்ட பூமான்—பூரிப்பால் தம்பிமார் படை மீது விழியோட்டும் கோமான்—திராவிடத்தின் ஒளி விளக்கு—தனமானத் தீப்சுடர் தங்கத்துட் தங்கம்—நமது தனித் தங்கம்—**அறிஞர் அண்ணா** எதிர்காலம் [illegible]

தி. மு. கழகத்தின் முன்னணி வீரர்கள் அனைவரும் முரசு முழங்குவர்.

இத்துணை சிறப்பு வாய்ந்த இரு பெரும் மாநாடுகளும் இசைவாணர் சிதம்பரம் **ஜெயராம்** அவர்களின் தமிழ் இசையோடு துவங்குகிறது.

மிக மிக முக்கியமான நேரத்தில் "தஞ்சை" நடைபெறுகிறது!

வேங்கண்ணாவின் வீழ்ச்சிக்குப் பிறகு தஞ்சையில் கூடுகிறோம். வீழ்த்திய வரையும் தன் பக்கம் ஆழ்த்தியவர் தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவராவார் என்ற செய்தி மலரும் நேரத்தில் தஞ்சையில் கூடுகிறோம்

புதிய திட்டம் தீட்ட, போர் விளக்கம் பெற, தஞ்சை அழைக்கிறது. மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவர்கள் நீலமேகம் பெத்தண்ணன் சார்பாக, செயலாளர் பதியின் வாயிலாக தஞ்சைத் தரணி அழைக்கிறது, தமிழ் பூமியின் காவலர்களை, செந்நெற் கொல்லையாம், சோழர் தலை நகரில் கூடிடுவோம் வாரீர், வாரீர், என நாமும் அழைக்கிறோம் !

வாழ்த்துகிறோம், வரவேற்கவில்லை!

தேசிய ஆரிய ஏடுகள் அனைத்தும் திறமையற்றவர் என்று ஒரு முகமாகத் தீட்டிட, திரு காமராசர் சென்னையின் முதன் மந்திரியாக பதவி ஏற்கிறார். காங்கிரஸ் இயக்கத்தின் விடுதலைப் போர் காலமிருந்து இது வரையிலே தொண்டராகவும் தலைவராகவும் இருந்து பெருந் தொண்டு ஆற்றியவர் திரு காமராசர். "திறமை" என்பதற்கு ஆரிய ஏடுகள் என்ன இலக்கணம் கூறுகின்றனவோ; "ஆச்சாரியார் அகராதி" செப்பும் பொருள்தான் என்னவோ; நாமறியோம்; ஆயினும் காமராசர் அமைச்சராயிருப்பதற்கு தகுதியுடையவர் என்றே நம்புகிறோம். பெருந்தமிழர் ஒருவர் சென்னை முதல்வராய் வருவதற்கு மனமார வாழ்த்துகிறோம். அவர் டில்லித் துரைத்தனத்தின் ஏவல் கேட்டுக் கூவ வேண்டிய சேவலாயிருக்க வேண்டுமே யென்பதை எண்ணும்போது அவர் பதவிக் கட்டில் ஏறுவதை வரவேற்றிடத் தயங்குகிறோம்.

கும்பமேளா கொலுவில்

இனவெறியும் மொழிவெறியும் கொண்டவர் தி. மு. கழகத்தார் என்று குற்றம்சாட்டுகிறார்களே, அவர்களெல்லாம் மார்ச் 29ம் நாள் புதுடெல்லி மக்கள் சபையில் நடை பெற்ற மௌலானா ஆசாத்தின் சொற்பொழிவை சற்று கூர்ந்து நோக்க வேண்டும். கல்வி மான்யக் கோரிக்கை பற்றிய விவாதத்திற்கு பதிலளிக்குமுகத்தான் ஆசாத் அவர்கள் அரிய உரை ஆற்றியிருக்கிறார். அந்த உரை கேட்ட பிறகாவது இந்த உணர்ச்சி கெட்ட தமிழ் நாட்டுவிபீடணர்கள் விழித்தெழுவார்களா என்பது நமது ஆவல் நிறைந்த ஐய வினா! ஆசாத் பேசுகிறார் கேளுங்கள்: "இந்தி பூரண வளர்ச்சி பெற்று தனக்குரிய ஸ்தானத்தை அடையும்படி செய்வது தன் கடமை யென்று கல்வி இலாகா கருதுகிறது. இதில் எவ்வித தாமதத்தையும் அது சகித்துக் கொண்டிருக்காது"

"15 வருடத்தில் ஆங்கிலத்தின் ஸ்தானத்தை இந்தி ஏற்க வேண்டு மென்று இந்திய சர்க்கார் கருதுகின்றனர்"

'இந்தியை வளர்க்கும் திட்டம் 3 பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. முதல் ஐந்துவருஷங்களில் உயர்தரப் பாடசாலை வகுப்பு வரையில் இந்தியைக் கட்டாய பாடமாக்கப் பட்டிருப்பது கண்டு மகிழ்கிறேன். இந்தியின் வளர்ச்சிக்கு சாத்யமானதை எல்லாம் கல்வி இலாகா செய்யும்"

இத்தகைய இந்தி ஆ[illegible]ப்பு [illegible]

கொலுவில் (டில்லி பார்லிமெண்டில்) மந்திரி ஆசாத் மொழிந்திருக்கிறார். அவர் அவ்வளவு பேசியுங்கூட டாண்டனுக்கும், சேத் கோவிந்த தாசுக்கும் அதிருப்திதான். உருது நூல்களை வெளியிடும் 'அஜாம்கர்ஷிப்லி' என்ற கழகத்திற்கு மான்யம் அளித்ததை டாண்டன் கண்டித்தார். ஏ–தமிழகமே! தென்னாடே! வடவரின் மொழி வெறியைப்பார் ! இந்திசாகித்ய சம்மேளனத்திற்குஆண்டுக்குரூ 40,000 வீதம், ஐந்து வருடமாக மான்யம் தரப்பட்டு வருகிறது. ஆயினும் வட நாட்டார் கும்பமேளா கொலுவில் கண்டனக் குரல் எழுப்புகிறார்கள் பிற மொழிக்கு வழங்கப்படும் சிறு சலுகையும் தரக் கூடாதென்று !

அதே கொலுவிலே—1949ல் கோரப்பட்டபடி தமிழ்க்கலைக் களஞ்சியத்திற்காக ரூ 80,000 மான்யம் கொடுக்க சர்க்கார் தீர்மானித்த போது எவ்வளவு பெருங் கூச்சலும் குழப்பமும் எதிர்ப்பும் சூறாவளி யெனக் கிளம்பின என்பதை தமிழகம் மறந்து விடக்கூடாது !

இன வெறியும் – மொழிப் பித்தும் கொண்டு அலைபவர்கள் திராவிட இயக்கத்தினரா? அல்லது வடநாட்டு இந்தி ஆதிபத்யக் காரர்களா? என்பதை டில்லி கும்பமேளா கொலுவில் மார்ச் 29ம் நாள் நடைபெற்ற இந்த விவாத நிகழ்ச்சியை ஒரு முறை சிந்தித்து விட்டு–பிறகு முடிவு [illegible]

டூப்ளே மண்டலம் தூள்! தூள்!!

பதினேழாம் நூற்றாண்டின் துவக்கம். இந்தியத் துணைக்கண்டம், அவிழ்ந்து கொட்டிய நெல்லிக்காய் மூட்டை போல சிதறுண்டு அலங்கோலமாகக் கிடந்தது. வலை பின்னிக் கிடந்த எல்லைக்கோடுகளும், நிலை தவறிப் போன குறு நில மன்னர்களின் ஆட்சியும், பொன்னைத் திரட்டும் 'திருப்பணி'யில் ஈடுபட்டிருந்த வெள்ளையரை மண்ணைக் கைப் பற்றவும் தூண்டியது. ஆண்டுகள் உருண்டன.

சென்னை மண்ணில் வெள்ளையருக்கு வயது நூறாகிவிட்டது. விஜய நகர சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றது. வட நாட்டில் மொகலாயப் பேரரசு அழிவோடு போராடிக் கொண்டிருந்தது. பிரஞ்சுக்கார டூப்ளே பீடு நடை போட்டு புதுச்சேரி புகுந்தான். டூப்ளே வந்த நேரத்தில் வாணிபத்துறையில் ஈடுபட்டிருந்த போர்ச்சுக்கீசியருக்கும், டச்சுக் காரருக்கும் பெருத்த தோல்வி யேற்பட்டிருந்தது. வெள்ளையர்கள் 'தனிக் காட்டு ராஜா'வாக பவனி வந்து கொண்டிருந்தார்கள். இந்த நேரத்தில் டூப்ளே நுழைந்தது வெள்ளைக் காரக் கிளைவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தாலும்—மனந்தளர்ந்து விடவில்லை. சிதறுண்டு கிடக்கும் நெல்லிக்காய்களை ஆங்கில மூட்டைக்குள் போட்டு அடைப்பதா பிரஞ்சு மூட்டைக்குள் 'போட்டு அடைப்பதா என்ற சம அந்தஸ்தையும் பலத்தையும் பிரஞ்சுக்காரர்கள் வெகு விரைவில்வளர்த்துக் கொண்டார்கள். ஆனால் இயற்கையின் உறுதுணையும் இன்ன பிற சாதகங்களும் மாவீரன் அலெக்சாண்டருக்கு தேடிக் கொடுக்காத வெற்றியை, போர்ச்சுக்கீசிய தளபதி அல்புகர்க்குத் தேடிக் கொடுக்காத வெற்றியை, துடித்துக்கொண்டிருந்த டூப்ளேக்குத் தேடிக்கொடுக்காதவெற்றியை வெள்ளையர்களுக்குத்தேடிக் கொடுத்தன. 1742ல் நுழைந்த டூப்ளே அவர் ஆயுட்கால முழுதும் பாடுபட்டும் 'அணில்வாய் கனி அளவு' நாடுதான் பெற முடிந்தது. அந்தக் கனியின் சிற்றுத்தான் இன்றைக்கு புத்துணர்ச்சி பெற்று விடுதலைக் கிளர்ச்சி செய்யும் புதுச் சேரி பூமி. குடும்பம்அந்நியர்களின் மேற் பார்வையிலிருந்த காலத்தில் தாய்க்கும் மகனுக்குமுள்ள பாசம் தெரியாமல் பிரித்து வைக்கப்பட்ட கொடுமையை, வெறிச் செயலை, அரக்கத் தனத்தை, அழித்தொழிக்க புதுவை எழுச்சி பெற்றுவிட்டது—பேரொலி எழுப்பிவிட்டது. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஒரு நாட்டுக்கு, ஆசியா கண்டத்திலுள்ள ஒரு நாட்டின் மத்தியில் 'கடுகளவு' பூமிஇருப்பதென்றால் அது உலக ஜனநாயகத்திற்கு ஒத்து வராதது—அதோடு அரசியல் நாகரிகத்திற்கும் அப்பாற்பட்டதாகும். ஐக்கிய நாட்டு அவையில் அங்கம் வகிக்கும் ஒரு நாட்டின சிறுபகுதியை அதன் தாய் நாட்டோடு இணைக்க இணங்காத பிரான்சுக்கு உலக அரங்கில் வீற்றிருக்கவும் நால்வர் மாநாட்டில் கைதூக்கும் பொம்மையாக இருக்கவும் கூட தகுதி யில்லை என்று துணிந்து கூறலாம். தானாக விட்டுக்கொடுக்கும் 'தாராளமனப்பான்மை' இல்லா விட்டாலும், தட்டிக் கேட்ட பின்பாவது தர வேண்டாமா?

புதுவை மக்கள் 'நாங்கள் தாயகத்தோடு சேரவேண்டும்' என்று குரல் எழுப்பியும் பிரஞ்சு சர்க்கார் அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதை யார் தான் விரும்புவர்! இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எந்தக் கட்சியாயினும், புதுவையின் விலங்கை முறிக்கும் நற்பணியில் கடந்தவைகளை மறந்து காரிய மாற்றத்தவறாது என்பதை பிரஞ்சுக் கவர்னர் உணர வேண்டும். "நாங்கள் அருகாமையில் தான் இருக்கிறோம் — கூப்பிடு தொலைவில் தான் இருக்கிறோம் புதுவை, காரை, மக்களே அஞ்சேல்! வெற்றி நமதே!" என தி. மு. கழக பொதுச் செயலாளர் அண்ணா கை கொடுக்க முன் வந்துவிட்டார். அண்ணாவின்விரலசைந்தால் என்னவாகும் என்பதை பிரஞ்சுகவர்னர் பத்திரிகையிலாவது படித்திருப்பார் ஜூலை மாதத்தில்!

அதோடு மற்ற கட்சிக்காரர்களும் சேர்ந்து முகாமமைத்து முரசு கொட்டினால் புதுவையிலுள்ள டூப்ளே தர்பார் கிடுகிடுத்துப் போவதன்றி பிரான்சிலுள்ள தலைமைக் கோட்டையும் அதிருமென்பதை அவர்கள் உணர்ந்து புதுசேரியை விட்டு பயணப் படவேண்டு. அது தான் முறையும் கூட!

காம கோடிக்கு...

1-ம் பக்கத் தொடர்ச்சி

மாசேதுங் நமது ராஜேந்திரர் போல சிரங்கம் காசிக்கு க்ஷேத்ராடனம் செய்யப் போவதில்லை—அப்படி யிருந்தும் அந்த நாடுகளில் களிப்பு நடமாடுகிறது; இங்கோ—சதுர்த்தி, சரஸ்வதி பூசை, சங்கர ஜெயந்தி—ஸ்ரீராம நவமி—அறுபத்தி மூவர் திருநாள்—ஆழ்வாராதியர் உற்சவம்—அனுமன் பிறந்த நாள்—இப்படி ஆயிரமாயிரம் திருவிழாக்கள்—தெய்வீகப் பண்டிகைகள் — கொண்டாடப் படுகின்றன. அப்படியிருந்தும் பசிகாரர் குறையவில்லை—பஞ்சைகள் வாழவில்லை. தரித்திரம் ஓடவில்லை—தரணிக்கோர் சிறு வளமுமில்லை... ஏன்? ஏன்?..." என்று அந்த திராவிடாள் கேட்பர். அதெல்லாம் விதண்டா வாதம் என்று கூறி விட வேண்டியது தான்! வேறென்ன பதில் சொல்ல முடியும்.

"கோயில்கள் உயரவேண்டும். அப்போதுதான் குடிகள் உயரும்—கொடு பணத்தை" என்ற தோரணையிலே தாங்கள் விடுத்த அறிக்கை சாலப் பொருத்தமாகும். எந்த ஏழை குந்தக்குச் சின்றி நொந்து கிடந்தால் நமக்கென்ன? வெந்ததைத் தின்று விட்டு வீண் பொழுது போக்கும் நமது வம்சம் இந்த நிலைமையிலேயிருந்து கிஞ்சிற்றும் மாறுமல் வாழ்வு நடத்த வேண்டும்—அவ்வவுதான்! தங்கள் அறிக்கைப் படி கோயில்களை சீர்படுத்த பணமில்லை-பணமலைகளைக் கோபுரம் போலக் குவிக்க குபேரர்கள் பலர் முன் வருவார்கள்.

"ஏழைகள் சாகும் போது ஏழடுக்குக் கோபுரம் உனக்கேன் எம் பெருமானே?" எனகேட்பர்!

"திண்டாடும் மக்களின் குரல் கேட்காத உன் காதில் திருவெம்பாவைக் குரல் கேட்குமா?" எனக் கேலி செய்வர்!

"வேதனை ஒலி புகாத உன் செவியில்—ஆண்டவனே! வேத ஒலி மட்டும் புகுமா?" எனக் கேட்பர்.

"ஏர் ஓட்டும் மக்கள் ஏங்கித் தவிக்கையிலே தேர் ஓட்டம் ஏன் உனக்கு தெய்வங்களே!" என்று கேட்பர்.

"பாலுக்குச் சிசுக்கள் அழுகையிலே; பழனி வேலா உனக்கு பாற்குடம் காவடியா?" எனவும் கேட்பர்.

இதெல்லாம் யார் கேட்பர்—செங்கொடிக்காரர் கேட்கமாட்டார்கள். அவர்கள் உலகக் கண்ணோட்டமுள்ள உத்தமர்கள். ஐக்ய முன்னணி அமைத்து அம்பாள் உற்சவம் கொண்டாடுவர். ஆகவே அவர்கள் கேட்க மாட்டார்கள். இந்த திராவிடக் கட்சியிருக்கிறதே—குறுகிய நாட்டுக் கட்சி அது கேட்கும் இந்தக் கேள்வி யெல்லாம்.

உம்—இதற் கெல்லாம் பயந்தால் முடியுமா ஸ்வாமிஜி! நீங்கள் பூமிதானம் பொருள்தானம் மூலமாக ஆலய ஜீரணோத்தாரணத்தை ஆரம்பியுங்கள்.

அடியேன், பொருள் குவிந்ததும் ஆண்டவன் திருத்தொண்டாற்ற ஓடோடியும் வருகிறேன். கடவுள் உங்களைக் காப்பாற்றுவாராக—என்னையும் சேர்த்து! மன்னிக்கவும்; அவருக்குத்தான் ஒரு வேளை பூஜைக்கே ஆபத்தாயிருக்கிறதென்று தங்கள் அறிக்கைகூறுகிறதே!

ஸ்ரீஜத்—
இப்படிக்கு
தங்கள் சிடகோடி—
நமஸ்காரம்

...(ஃ)...

புதிய ஏடுகள்

தோழர் தில்லைவில்லாளன் 30—3—54 மாலை 3 மணிக்கு தென்னாற்காடு மாவட்ட அடிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் "பூமாலை" என்ற மாத இதழுக்கும் 'பிரதர்' என்ற ஆங்கில வார இதழுக்கும் ஆசிரியர்—வெளியிடுபவர் —அச்சிடுபவராக பதிவு செய்து கொண்டார்.

அனுதாபம்

திருச்சி நகர சபை உறுப்பினரும், தி. மு. கழக ஆதரவாளருமான தோழர் என். சங்கரன் அவர்கள் 4—4—54 ஞாயிறு பகல் இயற்கை யெய்திய செய்தி கேட்டு திடுக்கிட்டோம் — துக்கித்தோம். அன்னாரின் மனைவி மக்களுக்கும் தமையனார் சாம்புவுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வெளி நாட்டுப் பத்திரிகைகளின் சந்தா விபரத்திற்கும், மற்ற விவரங்களுக்கும் இங்கே எழுதுக.

சேலம் அட்வர்டைசிங் சர்விஸ்
குகை, சேலம்

'மனக்குரங்கு' சொல்லும் எதிர்காலம்!



Best copy available

[காட்சி 1]

தோட்டம்

(அனார்கலி, சலீம் காதல்கீதம். தூரத்திலிருந்து ராஜாமான்சிங் பார்க்கிறார்)

சலீம் :— அனார்கலி! அனுப் பொழுதும் உன்னை விட்டு அகலாதிருக்க மார்க்க மொன்று தேடுகிறேன், கிடைக்கவில்லை!

அனார் :— நீங்களோ போர் வீரர்! உங்களுக்குத் தெரியாதா என்ன! உலகத்திலே நிரந்தரமான சமாதானம் நிலைத்த பிறகுதான், வானத்திலே வல்லூறுகளுக்குப் பதிலாக வெண் புறாக்கள் வட்டமிடும் நிலை ஏற்பட்ட பிறகுதான், வீரர்கள் வீட்டுக் காதல் விழாவில் இடை வேளை ஏற்படாமல் இருக்க முடியும். இல்லையா கண்ணாளா!...

சலீம் :— அனார்கலி! இரவு நேரம் சொல்லாமலே விடை பெறுகிறது. நம்மைக் கொல்லாமலே கொல்லுகிறது! என் செய்வது அன்பே. புறப்படட்டுமா?

அனார் :— ஆமாம். கடமை அழைக்கிறது உங்களை!

சலீம் :— அதை உன் காந்தக் கண் தடுக்கிறது. அதையும் உணருகிறேன். ஆனால்...

அனார் :— நாளைக்கு சந்திக்கப் போகிறோம் என்ற நம்பிக்கையில்—புலம்பும் என் இருதயத்துக்கு ஆறுதல் கூறி—வாய் உபசாரமாக உங்களை வழி அனுப்பி வைக்கிறேன்.

சலீம் :— அக்பரது குடை நிழலில் சிறு தவறு விளையவும் இந்த ஏழைச் சிப்பாய் காரணமாயிருக்கக் கூடாது ஏந்திழையே!

அனார் :— (தழுவுதல்)
என்னுடையவரே!

சலீம் :— வருகிறேன் கண்ணே......

(பிரிகிறார்கள்)

[ராஜாமான்சிங் தனக்குள் ஏதோ ஒரு முடிவு செய்து கொண்டு அகலுகிறார். அதை

[காட்சி 2]

அனார்கலி வீடு

(அனார் தன் வீடு நோக்கி ஆனந்தமாகப் போய்க்கொண்டிருக்கிறாள் உலகை மறந்த நிலையில். அவள் வீட்டுக்குள் பிரவேசிக்கும்போது அங்கே ராஜா மான்சிங் நின்று கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிடுகிறாள்)

அனார் :— யார்?

ராஜா :— ராஜா மான்சிங்!

அனார் :— ராஜா மான்சிங் !!

ராஜா :— ஆமாம்... அக்பர் சக்கரவர்த்தியின் அமைச்சன், ராஜ நிர்வாகி, படைத் தளபதி...

அனார் :— (சாவதானமாக — ஆனால் குறும்பாக)

அக்பருக்கு மைத்துனர் கூட! தெரியும் எனக்கு. ப்ரபூ! தங்கள் வருகையால் ஏழையின் குடிசை எல்லையில்லாப் பெருமையடைந்தது.

ராஜா :—ராஜ நர்த்தகி! என்னால் உன் குடிசை பெருமை யுற்றது என்கிறாய். உன்னால் இந்த மண்டலமே பெருமையடைய வேண்டும் என்கிறேன் நான்!

அனார் :—நடன மாதுநான்! நாட்டுக்குப் பெருமை தரும் தகுதி எனக்கென்ன இருக்கிறது?

ராஜா:—கொற்றவனின் கொலு மண்டபத்தில்......

அனார் :—நான் ஆடும் நடனத்தால் நாடு புகழடைகிறது என்கிறீர்கள்—இல்லையா?

ராஜா :— இல்லை... கொற்றவனின் கொலு மண்டபத்தில் மட்டுமே நீ ஆட வேண்டும்.

அனார் :—என்ன ?

ராஜா :—கோமகன் சலீமின் உள்ளத்திலும் நீ ஆடக்கூடாது!

அனார் :—என்ன?... சலீம்?... அவருக்கு ஒரு உள்ளம்! அதிலே என் ஆட்டம்?......

ராஜா :—அதைக் காட்சியாக்கிக் காட்ட ஒரு தோட்டம்!...

அனார் :—என்ன சொல்கிறீர்கள்?

அனார்கலி! ...ஜோடிப்புறாக்களாக நீங்கள் பாடி மகிழ்ந்ததைப் பார்த்து விட்டுத்தான் இங்குஓடி வந்திருக்கிறேன் நான்!

அனார் :—சரிதான். அக்பர் பாதுஷாவின் அதிகாரத்திலே காதல் புரிவது கடுமையான குற்றமென அவசரச் சட்டம் ஏதாவது......

ராஜா : — பிறக்கவில்லை...... ஆனால்......அப்படிக் காதல் புரிவோர் தகுதி பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது!

அனார்:— காதலுக்குத் தகுதி! நடனப் பெண்ணும் நாடு காக்கும் போர்வீரனும் நேசிக்கக் கூடாது!

ராஜா:— அவன் போர் வீரனல்ல, புவியாளும் மன்னன்.

அனார்:— ஆ!

ராஜா:— அக்பரின் திருமகன்! இந்த அவனிக்கு அதிபதி!

அனா:—ஆ!

ராஜா:— சலீம்! சலீம்! சலீம்!

அனா:— சலீம்! சலீம்! சலீம்! இல்லை இல்லை. அவர் சலீம் இல்லை. சக்கரவர்த்தியின் மைந்தரில்லை! சிப்பாய்தான். சிப்பாய்தான்! என் சிந்தை கவர்ந்த அவர் பொய் சொல்ல மாட்டார்!... பொய் சொல்ல மாட்டார்!

ராஜா:— நாடகமாடாதே! ஒரு நாடோடிப் பெண் சாதாரண சிப்பாயின் மீது சாகசவலை வீச மாட்டாள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சக்கரவர்த்தி, சபாமண்டபம், சப்ரகூட மஞ்சம், சாம்ராஜ்ய பவனி, இத்தனையும் ஒரு கண் வீச்சால் பெறலாம் என்ற முடிவு கட்டித்தான் முடியுடை வேந்தர் அக்பரின் செல்வனுக்கு நீ மோக போதை ஊட்டியிருக்கிறாய்!

அனா:— போதும் நிறுத்தும்! அக்கினிப் பிழம்பாகப் போய் விட்ட என் உள்ளத்தில் ஆயிரம் தேளெனக் கொட்டாதீர்! அனார்கலி அன்பு காட்டியது ஒரு சிப்பாயிடந்தான்! செங்கோல் ஏந்தி

ராஜா:— இன்னுமா மறைக்கிறாய் அனார்கலி!

அனா:— மறைத்தது நானல்ல! உங்கள் மகுடபதியின் மகன் தான்! சிம்மாசனமேறிகளை நான் மதிக்க மாட்டேன் என்பது தெரிந்து தான் இளவரசர் சலீம் இவ்வளவு பெரிய பொய்யை என்னிடம் சொல்லியிருக்கிறார்!

ராஜா:—நடந்தவைகள் நடந்தவைகளாயிருக்கட்டும்—இனி நடப்பவைகள் நல்லவைகளாயிருக்கட்டும்—இந்தா அனார்கலி! இலட்சம் பொன் தருகிறேன். எடுத்துக் கொண்டு போய் விடு எங்கேயாவது. இளவரசன் உன்னை மறந்து விடட்டும்!

அனா:—பொன்னுக்காக காதலித்திருந்தால் போய் விடுவேன்! நீர் தரும் லட்சமென்ன, கோடி கோடியாக என்னைத் தேடிவந்து கொட்ட குபேரர்கள் காத்திருக்கிறார்கள்! அவர்களும், சரி நீர் தரும் இந்தப் பொன்னும் சரி, எனக்கு மண்ணுக்குச் சமானம்! ...இந்த மண்ணுக்குச் சமானம்!

(மண்ணை யள்ளிக் காட்டல்)

ராஜா:—(அமைதியாக)

கொஞ்சம் சிந்தனை செய் அமைதியாக, பிறகு பதில் சொல்! படைவீரன் என எண்ணிப் பாசம் வைத்தாய்! பாராள்பவன் எனத் தெரிந்தும் மறந்து விட வேண்டியது தானே உன் கொள்கைப்படி! பெண்ணே! உன் ஸ்தானத்தில் நான் இருந்து இப்படி ஒரு சம்பவம் ஏற்பட்டால் கட்டாயம் சலீமை மறந்து விடுவேன்.

அனா:—நீர் மறந்து விடுவீர்! ...காரணம்—நீர் அனார்கலி அல்லவே!...

ராஜா:—சரி- முடிவாக என்ன சொல்லுகிறாய்?

அனா:—என் அபிப்ராயத்திற்குத் தடைபோட உங்களுக்கு அதிகாரம் கிடையாது!

ராஜா:—என்ன?

அனு:—அனார்கலியின் 'காதல் சுதந்திரம்' டில்லி ஏகாதிபத்தியத்திற்குப் பணிந்து விடாது!

ராஜா:—அதையுந்தான் பார்க்கிறேன்!

[காட்சி 3]

அனார்கலி வீடு

[அனார் அழுது கொண்டிருக்கிறாள்—அனார் என்ற சலீமின் இன்பக்குரல் கேட்கிறது அவளோ திடுக்கிட்டு மிதியுண்ட நாகம் போல் எழுகிறாள்]

அனு:—வருக வருக இளம் மனதை ஏங்க விட்ட ஏந்தலே வருக!

சலீம்:—அனார்! குறித்த நேரத்தில் வரவில்லை என்று தானே கோபிக்கிறாய்?

அனு:—கொலு மண்டபத்து மனிதர்களுக்கு நேரமாவது நினைப்பாவது...

சலீம்:—கொலு மண்டபத்து மனிதன்! அப்பப்பா! எவ்வளவு ஆத்திரம்! அனார்! உன் கோபத்தில் என் அந்தஸ்தைக் கூட உயர்த்துகிறாயே!...ஏழை சிப்பாய் நான் என்று ஏளனம் செய்கிறாயா?

அனு:—தெரியும் எனக்கு! தென்றல் நடை பேசும் தீரரே! போர் வீரனல்ல என் காதலர், புவியாளும் பாதுஷாவின் புதல்வர் என்று!

சலீம்:—ஆ!

அனார்:—புரிந்து விட்டது! நீங்கள் மூட்டிய புகை மண்டலம் மறைந்து விட்டது! உண்மை, உதய சூரியனைப் போல வெளிக் கிளம்பி விட்டது!

சலீம்:—அனார்கலி! இல்லை... இல்லை......

அனார்:—(கோபமாக-அழுகையோடு).

ஆமாம் அப்படித்தான்! நீங்கள் சலீம் இல்லைதான்! சாமான்யமான சிப்பாய்தான்! நீங்கள் ஜரிகைப் பூ அல்ல! சாமந்திப்பூ! நீங்கள் மாளிகையின் வெள்ளி மலரல்ல! மணம் வீசும் முல்லைமலர்! என் நெஞ்சு கவர்ந்தவர் ஒளி விடும் தங்க ரோஜா அல்ல! பனி விழும் இன்ப ரோஜா! இளைய ராஜா அல்ல! இதய ராஜா! அப்படித்தானே சலீம்! அது போலத்தானே நான் நம்பி ஏமாற வேண்டும்?

சலீம்:—அனார்!...சொல்வதைக் கேள்!

அனார்:—கேட்டேனே பல முறை!... "கேடயமும் ஈட்டியும் தாங்கி போர் முனை செல்லும் பட்டாளத்து வீரனடி நான்" என்று கூறிய போலிப் பேச்சை கேட்டேனே பல முறை! அப்போதெல்லாம் தெரியாதே எனக்கு அந்தஸ்து பேதத்தின் அளவு! தெரிந்திருந்தால், ஆகாயத்துச் சூரியனுக்காக, இந்தத் தடாகத்துத் தாமரைமலர்ந்திருக்காதே! பிறைக் கொடி காக்கும் பெம்மானின் பிள்ளையே! டெல்லி ஆதிபத்தியத்தின் எதிர்காலக் காவலரே! என்ன விழிக்கிறீர்? திரை மறைவில் அனுபவித்த தேன் விருந்து! தெவிட்டியபின் வீசி எறிய வேண்டிய காதல் அமுதம்! அந்தத் தேவை தீருவதற்குமுன் தடை போட்டு நிற்கிறதே என்று எண்ணுகிறீரா?... படை போட்டு வாழும் பாதுஷாவின் மைந்தரே! சிப்பாய் நடை போட்டு வந்து என்னை ஏமாற்றியது போதும்! சென்றுவிடும்!

சலீம்:— அனார்!......உன்னை நான் ஏமாற்ற எண்ணியதில்லை! ராஜ குடும்பம் என்றால் பயந்து விடுவாயே என்றுதான் போர் வீரன் என்று புகன்றேன்!

அனார்:—பயந்து விடுவேன் என்றல்ல; மறுத்து விடுவேன் என்று! இணங்க மாட்டேன் என்று! சாதாரணமான மனிதர்களும் செய்யத் துணியாத சாகஸம், சலீம் பாதுஷா செய்திருக்கிறார்! காரணம் அனார்கலியின் மீது அவ்வளவு அன்பாம் அவருக்கு! துள்ளி விளையாடும்புள்ளி மான் மீது அன்பு கொண்ட வேங்கை, வெள்ளாடு போல வேஷம் போட்டுக்கொண்டுவந்ததாம், பாசத்தைக் காட்டி நேசத்தை வளர்க்க! அப்படித்தானே பாதுஷா தங்கள் கதையும்?

சலீம்:—அனார்கலி! போதும் நிறுத்து! சலீம், வேங்கையுமில்லை வேஷம் போடவுமில்லை. ஆனால் நான் என்ன சொல்லி உன்னிடத்திலே வாதிட்டாலும் நீ நம்பப் போவதுமில்லை! என் உள்ளத்திலே மெள்ள ஒலிக்கும் களங்கமற்ற காதல் கீதத்தை நீ கேட்க முடியாதபடிகோட்டைச் சுவர் தடுக்கிறது! இருதயத்திலே சித்திரமாக அமைந்துவிட்டஎன் காதல் ராணி அனார்கலிதான்என்பதை நீ காண முடியாதபடி 'அக்பரின் மகன்' என்ற திரை மறைக்கிறது! ஆகவே என் பேச்சும் பெரு மூச்சும் உன் காதில் விழாது! அனார்கலியின் ரோஜாப் பாதங்களின் அருகே சலீம் சவமாகக் கிடப்பதையே விரும்புகிறான் என்பதை இப்போதே செயல் மூலம்காட்டி விடுகிறேன். இதோ அனார்! இதோ!

(சலீம் வாளை எடுத்து தற்கொலை செய்து கொள்ள முயலுதல்)

அனார்:—(ஓடிப் போய்)

சலீம்! சலீம்! என்னை மன்னித்து விடுங்கள்!

சலீம்:— அனார்! (இருவரும் தழுவுதல்)

(காவலர் வந்து)

காவ:— உங்களிருவரையும் கைது செய்யும்படி அக்பர் பாதுஷா உத்தரவு!

(ராஜாமான்சிங் தூரத்திலிருக்கிறார்)

சலீம்:—ஆ!...ராஜா மான்சிங்!

ராஜா:—(தூர இருந்தபடி)

ஆமாம்! அக்பர் ஆட்சி அப்படித்தான் ஆணையிடுகிறது!

(சலீம்—அனார் அழைத்துச் செல்லப்படுதல்)

[திரையில் குரல்]

சலீமும் அனார்கலியும் குற்றம் அக்பர் பாதுஷா மரண தண்டனை விதித்தார் — அரச பரம்பரை அஸ்தமித்து விடக்கூடாது என்று எண்ணிய ராஜா மான்சிங் அக்பரோடு வாதாடி சலீமை மட்டும் விடுவித்தார்!

அனார்கலியை உயிரோடு சமாதி வைக்க வேண்டுமென்று ஆக்ஞை பிறந்தது! சேதிகேட்டு, சலீம் ஓடினான் காதலியை மீட்க! கண்மணியை மீட்க ஓடியவன் கண்டதென்ன?

அய்யகோ! அதற்குள்... அனார்கலி சமாதியில் மறைந்து விட்டாள்!

[காட்சி 4]

சமாதி

சலீம்:—அனார்! அனார்! மறைந்து விட்டாயா என் மாசற்ற ஜோதி மழையே! பெண்ணிற் பெரும் பொருளே! பேரழகின் பிறப்பிடமே! என் கண்ணிற் படாமல் உன் கட்டழகைக் கல்லறைக்குள் மறைத்து விட்டார்களா மாபாவிகள்! காதலுக்கோர் எடுத்துக் காட்டே! கவிஞர்களும் தொடுத்திட இயலா கற்பனை ஆரமே! சிரித்துச் செழிக்க உன் சிங்கார முகத்தை எரித்துக் கெடுக்க வேண்டாமென்று கல் கொட்டி மூடினரோ, கல்லினும் வலிய மனமுடையோர்! காதலீ! அனார்கலீ!! அனார்கலீ!!!

பாவிகளே, என் அனார்கலியை அழித்து விட்டீர்கள்! என் இதய ஜோதியை அணைத்துவிட்டீர்கள்! அமர வீணையை உடைத்து விட்டீர்கள்! காதல் மகாகாவியத்தின் சிரஞ்சீவிக் கதாநாயகியைக் கல்லறைக்குள் மூடி விட்டீர்கள்! அவள் அழகை மறைத்தீர்கள்! ஆனால், அற்ப சந்தோஷக் காரர்களே, அவளை சலீம் நெஞ்சத்திலிருந்து எடுத்தெறிய யாருக்கும் துணிவில்லை! யாருக்கும் திறனில்லை!

நாடோடியாம் அவள்! நாடாள வேண்டியவனும் நான்! என் சுட்டுவிரல் அசைவுக்கு எட்டுத் திக்கும் பணியுமாம்! படைபல உண்டாம் எனக்கு! தடைபல கடக்கலாமாம் நான்! பெரிய ஊர்போல அரண்மனை! பிரமாண்டமான கோட்டை! எடுபிடி, ஆள், அம்பு, யானை, சேனை ஏராளம், ஏராளம்! மணி முடியுண்டு! பணி புரியப் பலர் வருவர்! மந்த மாருதம் வேண்டுமா அதற்கோர் சோலை! நீந்தி விளையாடவா அதற்கோர் நீரோடை! பட்டு விரித்த தரையிலே பாதம் பட்டால் நோகுமே என்று கவலைப்பட கணக்கற்றோர்! மொட்டு விரிந்த மல்லிகை நல்லதா, முல்லை நல்லதா? மஞ்சத்தில் பரப்ப — என்று யோசிப்போர் ஆயிரம் ஆயிரம்...

இவ்வளவும் இருந்தென்ன, இத்தனை சுகமும் கிடைத்தென்ன? இதயத்தில் குடியேறி விட்டவளை ஏற்றுக் கொள்ளும் உரிமை கிட்டாத எனக்கு? விரும்பியவளை அடைந்திடும் சுதந்திர மில்லாத எனக்கு? இவ்வளவும் இருந்தால் என்ன!

அரண்மனை ஏன்? ஆடம்பரம் ஏன்? அரச வாழ்வு ஏன்? என் ஆணை கேட்க ஆயிரம் ஆட்கள் ஏன்? ஏன்? ஏன்...? அனார்கலி உன்னை அடைய முடியாத இந்தப் பாவிக்கு இத்தனையும் ஏன்? உயிரோடு உன்னை சமாதி வைத்ததை தடுக்க முடியாத இந்த அடிமை ராஜ குமாரனுக்கு ராஜ்யந்தான் ஏன்? நீயில்லாத பூமியில், என் அன்பே! எனக்கு வாழ்வுதான் ஏன்?

அக்பரின் மகன் ஒரு நடனமாதை காதலிக்கக் கூடாதாம். என் கட்டழகியை மூடியுள்ள கல்லறையே நீசொல். ராஜீய அந்தஸ்து குறைந்து விட்டதே என்று அவளை நீ விழுங்கி விட்டாய்! முஸ்லீம் பாதுஷா அக்பர், ராஜ புத்ர ஜோதிபாயை மணந்து கொள்ளலாமாம். அந்த ஜோதி பாயின் மகன் ஒரு நடன சுந்தரியைக் காதலிக்கக் கூடாதாம். என் காதலியை விழுங்கியுள்ள கல்லறையே நியாயந்தானா சொல்? நீ இப்போது வழங்கியிருப்பது நல்ல தீர்ப்புத்தானா சொல்...சொல்லமாட்டாய்! உனக்கு உயிரை குடிக்கத்தான் தெரியும்! இதோ அந்த வேலையைச் செய்! உனக்கு பழக்கமான அந்த வேலையைச் செய்!

[சலீம் சாகத் துணிகிறான்... அவன் மரணத்தை அந்த மண்டலம் விரும்பவில்லை.]



ஸ்தல புராணம்

திருமருகல் தலவரலாறு

"நந்தி"

கங்கை யாற்றங்கரையில் முனிவர்கள் ஒரு மாநாடு கூட்டினர். பெரியதோர்யாகம்செய்ய விரும்பிய அவர்கள், யாகத்தில் யாருக்கு முதற் பூசை செய்வது என்பது பற்றி, யோசித்தனர். பிர்மாவே பெரியவர் அவருக்கே முதற் பூசையென்றனர் சிலர். திருமாலே பெரியவர் என வாதிட்டனர் சிலர். சிவமே சிறந்தவர் எனப் போரிட்டனர் சிலர். நடைசியாக மூவரில் யார் பெரியவர் என்பதை அறிய பிரம்மாவின் மகன் பிருகு முனிவரை அனுப்பினார்கள். எல்லாம் தெரிந்த தபோதனர்கள் மூன்று கடவுள்களில் பெரிய கடவுள் யார் என்றே தெரியாமல் தவித்திருக்கிறார்கள். பாவம்; அந்தக் காலத்தில் 'வோட்டு' எடுக்கும் முறை இல்லைபோலும். இருந்திருந்தால் பிர்மாவுக்கு தாமரைப்பூ பெட்டியும், விஷ்ணுவுக்கு பாம்புப் பெட்டியும், சிவனுக்கு காங்கிரஸ் காரர்களின் மாட்டுப் பெட்டியும் வைத்து 'எலக்ஷன்' நடத்தி யிருக்கலாம். அதிருக்கட்டும்; மூவரில் பெரியவர் யார் எனக் கண்டறியச் சென்ற பிருகு முனிவர், முதலில் பிர்மலோகம் சென்றார். பிர்மா. தன் கூட்டத்துடன் ஆடல் பாடலில் ஈடுபட்டு ஆனந்தமாகக் கலை மகளுடன் காலத்தைப் போக்கினார். மகன் வந்ததையும் கவனியால் மனைவி சரஸ்வதியின் மடியில் கொஞ்சிக் கொண்டிருந்தார். அதைப்பார்த்த பிருகு முனிவன், தன் தந்தை பிர்மா—அகந்தைகொண்டவர்என முடிவு கட்டி அதை விட்டுக் கிளம்பி சிவலோகம் போனார்.

சிவபெருமான் அம்மை உமையாளோடு ஆனந்த நடனம் ஆடிக் கொண்டிருந்தார். பார்வதி பரமேஸ்வரன் ஆடிக் காட்டிய ஆண் பெண் ஜோடி நடனம் தானே இன்றைய தினம், இங்கிலாந்து அமரிக்கா முதலிய மேல் நாடுகளிலே பின்பற்றப் படுகிறது. அதன் தொடர்ச்சிதான் கொத்தலவலை கொனு மண்டபத்துத் தாண்டவமும்!

அத்தகைய அகிலப் பிரசித்தி பெற்ற ஆனந்த டான்சிலே அம்மையும் அப்பனும் ஈடுபட்டு, அங்கு வந்துள்ள பிருகு முனிவனைக் கவனியாதிருந்தனர். "மனையாளோடு கூடி மகிழ்கிற உம்மை தேவநேசன் என்பது வீண்" என்றுகத்திக்கொண்டே பிருகு ரிஷி வைகுண்டம் ஓடினார். எந்நேரமும் சிருட்டித் தொழிலில் ஈடுபட வேண்டிய பிரமனே காதலியோடு கொஞ்சினன் சுடுகாட்டு சிவனே, சுந்தர நடனம் ஆடினன் என்றால் காதல் கேளிக்கைகளை கற்றுத் தரவே பிறந்த விஷ்ணுமூர்த்தி, சும்மாவா இருந்திருப்பார்!

ஆதிசேஷனின் படுக்கையிலேரும் அவர் தெய்வக் காதலி திருமகளும் ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருந்தனர். அதைக்கண்ட பிருகு முனிவர் ஓடிப்போய்திருமாலின் மார்பிலே உதைத்து விட்டார். திருமால் பிருகு முனிவரை அழைத்து அவரது கால்களைக் கழுவி வணங்கி—"என்னை உதைத்த உமது கால் நோகுமே!" என்று கவலைப்பட்டார். அது கண்ட பிருகு மாமுனிவர், விஷ்ணுவின் சாந்தத்தைப் போற்றி "பெருமாளே யாவரினும் பெரியவர்!" என்ற முடிவை கங்கைக் கரை காவியாடைகளுக்குத் தெரிவித்தார். பிருகு முனிவரால் உதைபட்ட விஷ்ணுவிடம், திருமகள் கோபமாக— "உதைத்தவனை உபசரித்தீர்! நானை ஒருவன் என்னை வலிந்து பற்றி இழுத்துப் போனாலும் இப்படித்தான்விட்டு விடுவீர்! அறிவற்றவனுக்கும் நீர் ஓப்பாக மாட்டீர்." என்றுகூறி வைகுண்டம்விட்டு வெளியேறினாள். அப்படி வெளியேறியவள், காவேரிக்குத் தென்கரை யோரமுள்ள இடத்துக்கு வந்தாள். அங்குள்ள ஒரு இடத்தில்குளம் வெட்டி அதில் மூழ்கித்தவம் செய்தாள். அவளைத் தேடிக் கொண்டு விஷ்ணுமூர்த்தி அங்கு வந்தார். பிறகு இருவரும் சமாதானம்அடைந்து தழுவிக்கொண்டனர். திருமாலும் திருமகளும் ஒன்று சேர்ந்த அந்த ஊர்தான் திருமருகல் க்ஷேத்திரம்!

தெய்வப் பெண்ணொருத்தி தன் கணவனிடம் பேசத்தகாத வார்த்தை பேசுவதும்—அதன் காரணமாய் கணவன் மனைவி சண்டை ஏற்படுவதும்—அதன் விளைவாக ஒரு ஸ்தல புராணம் தோன்றுவதும்—அந்த ஸ்தலத்திலே நமது நாட்டுப் பொருள் முடங்குவதும்—மக்களின் சிந்தனைக்குரிய விஷயங்களாகும் மேற்கண்ட கதை திருமருகல் ஸ்தல வரலாறு என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

இந்த தலத்திற்கு 181 ஏக்கர் நஞ்சை நிலமும், 55 ஏக்கர் புன்செய் நிலமும் உண்டு. வரி நீக்கிய வருமானம் பத்தாயிரம் ரூபாய். ஆயிரக்கணக்கானரூபாய் செலவழித்து பிரம்மோற்சவங்கள் கொண்டாடப்படுகின்றன.

கங்கைக் கரையில்கமண்டலத் தாடிகள் கூடுவானேன்? கூடிய காவிகள் யார் பெரியவர் என்று சாடுவானேன்? பிர்மா - விஷ்ணு ருத்ரர் மூவரின் அந்தப் புரத்துக்கு பிருகு முனிவன் போவானேன்?

பள்ளியறையில் உள்ள பரந்தாமன் மார்பில் பக்தி மறந்து உதைப்பானேன்? இவையெல்லாக தெய்வக் கதைகளாம்! திருநிறை சுவடிகளாம்! தல வரலாறுகளாம்! ஏழை வாழ முடியா நாட்டிலே ஏழடுக்குக் கோபுரங்க! அதிலேஎம்பெருமானுக்கு ஏக்கரா கணக்கில் நிலங்களாம்! அந்தோ! அறிவுலகம் சிரிக்கிறது—வெட்கம்! வெட்கம்! ஃ

இருளைக்கிழித்து வெளிக்கிளம்பும் இன உணர்ச்சி நாடகங்கள்;

இராசேந்திரன் நாடக மன்றம்

தமிழ் நாட்டு சுற்றுப்பயணம்.

கீழ்க்கண்ட ஊர்களில் அறிஞர் அண்ணா எழுதிய 'சந்திரமோகன்'— கரூர் சேதுராமன் எழுதிய திருமணம் நாட்கங்களை நடத்துவர் நடிகர்கள்:-எஸ். எஸ். இராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், ஜி. முத்துகிருஷ்ணன்

13–4–54 காரைக்குடி (இரு நாடகங்கள்)
17–4–54 மதுரை
18–4–54 மதுரை
19–4–54 கோவில் பட்டி
20–4–54 கல்லுப் பட்டி

விரைவில் எதிர்பாருங்கள்; மு. கருணாநிதி எழுதிய

"அம்மையப்பன்"

மக்கள் தூதுவர்களா? :: :: மண் பொம்மைகளா?

"காங்கிரஸ் தூதர்களே, நீங்கள், மாநில சீரமைப்புக்குழு சம்மந்தப் பட்டவிஷயத்தில் தலையிடக்கூடாது. காங்கிரஸ் கமிட்டிகள் கூட இது சம்மந்தமான கிளர்ச்சிகளில் ஈடுபடக்கூடாது, மாற்றுக்கட்சிக் காரர்கள் தீர்மானங்கள் நிறை வேற்றினாலும் நீங்கள் அதை ஆமோதிக்கக் கூடாது —அவர்கள் சார்பாகப் பேசவும் கூடாது!' என்று இந்தவாரம் டெல்லியில் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டி, காங்கிரஸ் காரர்கள் அனைவருக்குமே ஒரு கட்டளைப் பட்டியலை நீட்டியிருக்கிறது. 'காங்கிரஸ்காரர்கள்' என்று காரியக் கமிட்டியில் கூறியது, கட்சிப் பணியின் முதற்படியிலுள்ளவர்களையல்ல, கொடி பிடிப்பவர்களையுமல்ல, கோஷமிடுபவர்களையுமல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு சட்டமன்றங் களுக்குள் புகுந்தவர்களின் பேச்சுரிமையையும், எழுத்துரிமையும் தான் இக்தக் கட்டளை 'வெடுக்' என்று பிடுங்க எத்தனித்திருக்கிறது.

மொழிவழி மாநிலம் பிரிக்க வேண்டியது அவசியம் தானா என்பதையும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் எல்லைக் கோடுகள் எங்கெங்கே கிழிக்கப்பட வேண்டும் என்பதை பரிசீலனை செய்து முடிவுகட்டவும மத்திய அரசாங்கம் நியமித்துள்ள குழுவின் கருத்தை எதிர்க்கக் கூடாது என்பதுதான் காரியக் கமிட்டியிட்ட கட்டளையின் பொருள்; சட்ட மன்றங்களில் கூட காங்கிரஸ் காரர்கள் இதுபற்றி தீர்மானம் கொண்டுவரவோ பிறர் கொண்டு வந்தால் அதை வழிமொழியவோ கூடாதென்றும் காரியக் கமிட்டி, உறுப்பினர்களின் குரல்வளையை நெறிக்கிறது.

"இவ்வளவு பெரிய வாய்ப்பூட்டுக் கட்டளை நமக்கு மட்டும் ஏன்? நாமும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் தானே, என்று எந்தக் காங்கிரசுக் காரருக்கும் கேட்க நாவெழவில்லை — கேட்டால் குந்தியிருக்கும் இடத்திற்கு ஆபத்து என்ற அச்சம் போலும்!

காரியக்கமிட்டி வேண்டுமானால், உலை வாயை மூடி விட்டதாக உற்சாக முற்றிருக்கலாம் — ஊர்வாயை மூடவேண்டுமே — அது யாரால் முடியும்! மாநில சீரமைப்புக்குழு விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் தலையிட்டுக் கேட்காவிட்டாலும் பூனா பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஜயகர் கேட்கிறார் இந்திய சர்க்காரின் மாநில சீரமைப்புக் குழுவில் இடம் பெற்றிருக்கும் இருவர் மொழிவழி மாநிலத்தை ஏற்கனவே எதிர்த்தவர்கள். அவர்களைக் கொண்ட மொழிவழி மாநிலம் பற்றிய நல்ல தீர்ப்புப் பெறுவதெப்படி! இது தோழர் ஜயகரின் குற்றச் சாட்டு. இதை ஜயகர் கேட்கலாம். காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த சாமிநாதன் கேட்க முடியாது -- மேலிடத்துக் கட்டளை அப்படி!

காங்கிரஸ் மகாசபை சுதந்திர போராட்ட காலங்களில் கூட்டிய மாநாடு களில் மொழி வழி மாநிலம் பிரிவதை முழு மனதுடன் ஆதரித் திருக்கிறதே, இப்போது மட்டும் ஏன் மொழி வழி மாநிலப் பிரிவினை கோருபவர்களை 'வெறியர்கள்' என்று சீறிப்பாயவேண்டும்? என்று நாம் கேட்கலாம் – எ. கோவிந்த சாமி கேட்கலாம் – கொலு வீற்றிருக்கும் கட்சியைச் சேர்ந்த வேறொருவர் கேட்க முடியாது.

காரியக் கமிட்டி, காங்கிரஸ் கட்சிக் காரர் களின் வாய்களைக் கட்டி அவர்களை மண் பதுமைகளாக்கியதின் மர்மம் இதுதான்

Filmed as bound

கலைத்தோட்டம்

கட்ட பொம்மன் காட்டும் வழி

ஒவ்வொரு நாட்டிலும் இலக்
யமும் – கலையும் – ஓவியமும்–
ற்பமும் — ஆட்சியோடு
பாட்டி போட்டு அந்நாட்டுக்
ப் பசுமை குலையாத புகழையும்
பற்றுத் தந்திருக்கின்றன;
ட்சியோடு சேர்ந்து அந்நாடு
ளப் பாலைவனத் தரையாகவும்
க்கியிருக்கின்றன. அதே நிலை
மையை நாம் நமது திராவிடத்
லும் காண முடிகிறது.

பாயும் அருவி — பறக்கும்
ள்ளை – அழகு துள்ளும் மான்–
வேசம் அள்ளும் வேங்கை.
வைகளை ஓவியத்திலே சித்தரித்



கள். அந்நாளில் வீரபரம்
ர நாட்டை ஆண்டு வந்தது.

பிறகு, பாயும் அருவியிலே
தாமரை! தாமரை இதழிலே
சுமி! பறக்கும் கிள்ளையிலே
மதன்! அழகு துள்ளும்
ன் – அந்த மாயமானைத் துரத்
இராமன் — அவன்
ளிலேசீதையெனும் தோகை
! அவர்கட்கோர் புராணம்!
களிலே பக்திமான்கள் நாட்
ப் பரிபாலித்தார்கள். அத
இத்தகைய மான்கள் – எழு
பட்டன ஓவியத்தில்! இது
ண்டாவது நிலை — வாழ்ந்து

விட்டது இந்நாள் ஓவிய உலகம்.

மறுமலர்ச்சி உதயமாகியிருக்கும் இன்றோ — இலக்கியங்களிலும் புதுமை! புதுமை!! புதியதோர் எழுச்சி!

ஆயிரம் நீலக்கண்களால் அழகை வாரிக்கொட்டி, மேகத்தைக் கண்டு மோகத்தால் ஆடும் மயிலைத்தீட்டி மகிழ்ந்த சித்திரக்காரன் — எழிலேற்றிக் காட்டிய ஓவியன் — அந்த மயில் மீது முருகனையும் ஏற்றிக் காட்டினான். இப்போதோ, அந்தத் தோகை மயில் மீதிருந்து வேலனை இறக்கி விட்டு "ஆடு மயிலே, ஆடு!" என்று தூரிகை மூலம் உரிமை வழங்கத் துவங்கி

அத்தகைய மறுமலர்ச்சி ஓவிய உலகத்தின் ஒப்பற்ற தூதுவர்—களிலே முன்னணியில் நிற்பவர்கள் பாலு சகோதரர்கள். அவர்கள் தீட்டிய அருமை மிகு சித்திரம் தான் இந்த இதழ் கலைத் தோட்டத்திலே ஒளிவிடுகிறது. கட்ட பொம்மனின் வீர யாத்திரையின் போது ஒரு காட்சியை இவ்வளவு உணர்ச்சிகரமாகத் தீட்டியிருக்கிறார்கள். காளைமாடு ஏறி காட்சி தரும் சிவலையப்பனை சித்திரமாக்கியவிசித்திரம் இருந்தது ஒரு காலம்; கட்டபொம்மனின் கம்பீரத் தோற்றக் காலம். அந்தக் குதிரையின் வேகத்தைத் தான் எப்படிக் காட்டியிருக்கிறார்கள். வெள்ளையனை விரட்டியடிக்கும் வீர பொம்மனின் சுடர் முகத்தை எத்துணை இயற்கையாக எழுதியிருக்கிறார்கள்.' இது போன்ற சரித்திர நிகழ்ச்சிகளை – திராவிடத்து இலக்கியங்களை – உலகத்துக் கதைகளை – ஓவிய மூலமாக உரைத்திடும் விற்பன்னர்கள் ஆயிர மாயிரமாகப் பெருகிட வேண்டும். புராண இதிகாசங்களை எடுத்துக் கொண்டால் தானே 'பாவம்' நிறைந்த படங்களை அமைக்க முடிகிறது; எனக் கூறிடும் பலரை நாம் காணுகிறோம். பரமசிவனின் கண்களிலே கிளம்பும் தீப்பொறியை தீட்டிப் பெருமை கொள்ளும் ஓவியர்களே! சேரன் செங்குட்டுவன் கனக விசயரை எதிர்த்த போது அவன் கண்களிலே கிளம்பிய கனலை எழுதிக் காட்டுங்கள்; நல்ல 'பாவ'த்தையும் அமைக்க முடியும். பகுத்தறிவு புரியின் பாராட்டையும் பெற முடியும். தேஜஸ் நிறைந்த முகம் திருமகளின் முகமெனக் கூறி வர்ணக் குழம்பை கையில் எடுப்போரே! சங்க இலக்கியச் சோலையிலே கொஞ்சம் நுழையுங்கள்; தங்கத்தைப் பழிக்கும் ஒளியுடைய மலர் முகங்கள் ஏராளமாகக் கிடைக்கும்; அருள் பொழியும் வதனம் விப்ர நாராயணருக்கு எனத் தூரிகை எடுப்போரே! அறிவு பொழியும் முகமுடைய விஞ்ஞானிகள் எத்தனையோ நூறுபேர்; அவர்களை மக்கள் மன்றத்துக்கு அளித்து மகிழுங்கள் அந்தப் புதிய எழுச்சிக்கு வித்திடுவோர் அனைவரையும் பாராட்டுகிறோம்; அந்த எழுச்சி மிக்கோர் படையிலே நல்ல இடம் பெற்றுள்ள நமது பாலு சகோதரர்களையும் பாராட்டுகிறோம் – வாழ்த்துகிறோம் — வளர்க அவர்கள் கலை – எனப் பண்பாடுகிறோம்.



குடிசைதான்—ஆனாலும் கொள்கை மாளிகை; நாகை வட்டாரத்து கிராமங்களில் உழவர்களோடு தொடர்பு கொண்டு நற்பணியாற்றும் நண்பர்கள் சந்தானம், சௌரி ஆகியோர் முயற்சியால் பல கிராமங்களில் நமது இயக்கம் பரவியிருக்கிறது. அவைகளில் ஒன்று மேலவாழைக்கரை. அங்கே தி. மு. கழகத் தோழர்கள் கழகத்திற்கென ஒரு கட்டிடம் அமைத்து அண்மையில் அதன் திறப்பு விழாவை கருணாநிதியைக் கொண்டு நடத்தினர். தோழர் ரங்கோபால் இடம் தந்து உதவினர். தோழர்கள் முயற்சியால் கட்டிடம் தோன்றியது.

கடைசிப்பக்கம்

(?) வட நாட்டு ராஜ்போஜை திராவிட நாட்டில் வரவேற்று உபசரிப்பதும் மேடை அமைத்துப் பேசச் செய்வதும் வட நாட்டை எதிர்ப்பவர்களுக்குப் பொருத்தமான செயலா?

வட நாட்டு ஏகாதிபத்யத்தைத்தான் எதிர்க்கிறோமே தவிர "வட நாட்டிச"த்தைத்தான் கூடாது எனக் கூவுகிறோமே தவிர—வட நாட்டில் உள்ள அறிவாளிகளைப் போற்றுவதிலோ—நமது கொள்கைக்கு ஆக்கம் தருகிறவர்களைப் பாராட்டுவதிலோ குற்றம் ஒன்றுமில்லை. "ஆங்கிலேயனே! வெளியேறு!" என்று கூறிய காங்கிரசிலேதான் அன்னி பெஸண்ட் அம்மையார் ஒரு காலத்திலே உழைத்தார் என்பதை மறந்துவிடக்கூடாது. வட நாட்டிசம்" நம் வெறுப்புக்கும் கண்டனத்திற்கும் உரியது. 'வட நாட்டு நல்லவர்களை, நம் கொள்கைக்கு உடன்பட்டவர்களை பகைத்திடும் நோக்கம் திராவிட இயக்கத்திற்கு இல்லை.

(?) புத்தர் வட நாட்டுக் காரரா இல்லையா?

கேள்வியின் நோக்கம் நன்றாகப் புரிகிறது. புத்தர் போல பொன்னொளி பரப்புகிறவர்கள் எந்த நாட்டுக்காரராயிருந்தாலும் நாங்கள் பாராட்டுவோம். அறிவியக்கத்திற்கு ஆக்கம் தருகிறவர்கள் யாராயிருப்பினும் திராவிட இயக்கம் அவர்களை ஆதரிக்கத் தயங்காது.

(?) பிராமணர்களை தூஷிக்கிறீர்களே; பார்ப்பன பாரதியாரையும்—வ.ரா—வையும் போற்றுவது சரியா?

பாரதியாரும் — வ. ரா வும் பார்ப்பனர்களாய்ப் பிறந்தாலும் அந்தப் பண்பிலேயிருந்து மாறி, பூணூலற்றவர்களாய்த் திகழ்ந்ததோடு — புது அறிவு விதைப்பவர்களாகவும் மாறிக் கொண்டு வரத்தொடங்கினார்கள். பிராமணியத்தை மட்டுமே தூஷிக்கும் கழகம் பிராமணியத்தை வெறுத்த அவர்களைப் பாராட்டுவது எப்படித் தவறாக முடியும். திராவிட இயக்கம், "வட நாட்டியம்" "பிராமணியம்" என்ற இரு ஏகாதிபத்யங்களைத் தான் எதிர்க்கிறது என்பதை வினா எழுப்பும் தோழர் விளங்கிக் கொள்வாராக.

(?) ஆரியனே வெளியேறு என்...

ஆரிய ஆதிக்கம்—ஆரிய மதப் பிடிப்பு – ஆரிய சாதி ஆணவம் – இவைகள் வெளியேற வேண்டுமென்றுதான் பொருள்.

(?) நீங்கள் கேட்கும் திராவிடம் என்ற சொல் சங்க இலக்கியத்தில் கிடையாது என்கிறாரே ம. பொ. சிவஞானகிரமணியார் அது பற்றி உங்கள் கருத்தென்ன?

சங்க இலக்கியத்தில் சிவஞான கிராமணியார் என்ற சொல் கூடத்தான் கிடையாது: அதற்காக கிராமணியார் என்று ஒருவர் கிடையாது எனக் கூறிவிடுவதா?

பெரிய இடத்துப் பொல்லாப்பு ஏன்!

"தேஷ்முக் விலகப் போகிறாராமே! அவருக்கும், நேருவுக்கும் தகராறு என்றால் அது ஆச்சரியப்படக்கூடிய விஷயம்தான்!"

"எனக்கும் அதுதான் புரியாத புதிராக இருக்கிறது. குடை விரித்துக் காட்டி, குத்தவரும் மாட்டை நிறுத்திடுபவர், கடை விழிகாட்டி கனல் மொழி பேசுவோரை சாந்தப்படுத்துபவர் என்றெல்லாம் போற்றப் பட்டவராயிற்றே தேஷ்முக், அவரையா நேரு பகைத்துக் கொண்டார்!"

"நேருவா பகைத்துக் கொண்டிருப்பார் என்கிறீர்கள். இருக்காது, ஒரு போதும் அப்படியிருக்காது. தேஷ்முக் தவறு செய்திருப்பார், நேரு கண்டித்திருப்பார், இதுதான் நடந்த விஷயமாக இருக்கவேண்டும்"

"எனக்கு அதில் நம்பிக்கையில்லை. உங்கள் கருத்துப்படி தேஷ்முக்கே தவறு செய்திருந்தால், நேருவும், ஆசாத்தும், ராதாகிருஷ்ணனும் தேஷ்முக்கைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்களே 'நீங்கள் பதவியைதுறக்கக் கூடாதென்று!"

"ஆமாம், அதுவும் சிந்திக்க வேண்டிய விஷயம்தான்"

"தேஷ்முக்கிடம் நேரு வேண்டிக் கொண்டதிலிருந்து பார்த்தால் எனக்கு இரண்டு காரணங்கள் தோன்றுகின்றன. ஒன்று, நேரு தன் தவறை உணர்ந்து தேஷ்முக்கை தேடிப் போயிருக்க வேண்டும் அல்லது தேஷ்முக் போய் விட்டால் வேறு ஆள் கிடையாதே நிதி இலாகாவிற்கு என்ற அச்சமாக இருக்க வேண்டும்!"

"இவ்வளவு பெரிய காங்கிரஸ் கட்சியில் நிதி மந்திரிக்குத்தானா பஞ்சம் வந்து விடப்போகிறது!"

"அதற்கு வழியிருந்தால் ஏன் இதுவரை ஒரு காங்கிரஸ்காரர் கூட டில்லி பீடத்தில் நிதி மந்திரியாக இருக்க வில்லை. காங்கிரசைக் கண்டித்த ஆர். கே. சண்முகமும் டாடாவின் செல்லப் பிள்ளை ஜான் மத்தாயும், வெள்ளையர் வளர்த்த சிந்தாமணி தேஷ்முக்கும் தானே அந்த இடத்தில் இருக்க முடிந்தது!"

"உண்மை இப்பொழுது தான் புரிகிறது. விட்டொழியுங்கள் நமக்கேன் அந்தப் பெரிய இடத்துப் பொல்லாப் பெல்லாம்!"

'சோமு' அச்சகத்தில் அச்சிடப்பட்டு தியாகராசசுந்தரம் அவர்களால் வெளியிடப்...